Booklet Serial No. :

Don't write anything in this space

Don't write anything in this space

| | | |
|---|---|---|
| தேர்வு | : | ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-I (ம) உதவி வனப் பாதுகாவலர் (தமிழ்நாடு வனப் பணி) IA (தொகுதி-I (ம) IA பணிகள்) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு |
| பாடம் | : | தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை) |
| தேர்வு நாள் | : | 01.12.2025 மு.ப. |

| | | |
|---|---|---|
| தேர்வு | : | ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-I (ம) உதவி வனப் பாதுகாவலர் (தமிழ்நாடு வனப் பணி) IA (தொகுதி-I (ம) IA பணிகள்) பதவிகளுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு |
| பாடம் | : | தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம் (தாள் – I)) (விரிந்துரைக்கும் வகை) |
| தேர்வு நாள் | : | 01.12.2025 மு.ப. |

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

TNPSC-SPECIMEN
Prepp Your Personal Exam Guide
Do not use this area

Prepp
Your Personal Exams Guide

TNPSC-SPECIMEN
Do not use this area
Prepp
Your Personal Exam Guide

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

# தாள் – I

# தமிழ்மொழி தகுதித் தேர்வு

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-I-இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும். அடித்த பகுதிகளில் கையொப்பம் இடக்கூடாது.

4. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

TNPSC-SPECIMEN
Your Personal Exam Guide

5. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

6. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

7. தேர்வர்கள் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

8. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.
   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

9. **கீழ்க்கண்ட தவறுகள் கண்டறியப்பட்டால், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**
   **The Answer Booklets will be invalidated if the following errors are found :**
   (i) வினா விடைத்தாள் தொகுப்பில் கருமை நிற மை பேனாக்களைத் தவிர மற்ற நிற மை பேனாக்களை (Whitener, Sketch Pens, Pencil, வண்ணப் பென்சில்கள் வண்ண மைப்பேனா, Crayons, etc.,) உபயோகப்படுத்தினால்.
   (ii) தேர்வர்கள், தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலாவது எழுதினால்.
   (iii) வினா விடைத்தாள் தொகுப்பில் எந்த ஒரு இடத்திலும் தொடர்பற்ற வகையில் பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல் தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் அல்லது முகவரி ஆகிய பொருத்தமற்ற குறியீடுகளை இடுதல் (அ) எழுதுதல்.
   (iv) தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைத்தாள் தொகுப்பில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.
   (v) தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.
   (vi) குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. எனினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம். மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது.
   (vii) பிற தேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது
   (viii) வினா விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீட்டினை சேதப்படுத்துதல்.
   (ix) வினா விடைத்தாள் தொகுப்பின் முதல் பக்கத்தில் இதற்கென உள்ள இரண்டு இடங்களிலும் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

TNPSC SPECIMEN

TNPSC SPECIMEN
www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

## அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 1 | சமூகத்தின் பல பிரிவினரும் தங்களது பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றவும் தங்களது தனித்திறமைகளுக்கு ஏற்ற வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளவும், சமூகத்தில் சமத்துவம் நிலவுவது அவசியமாகும். ஒவ்வொரு நபருக்கும் நியாயமான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு, சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை எவ்வளவு முடியுமோ, அந்த அளவிற்கு நீக்கிட முயல வேண்டும்; அல்லது அதன் தாக்கத்தைக் குறைத்திட நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியம். உதாரணமாக, தரமான மருத்துவ வசதிகள், கல்வி, சத்தான உணவுகள், குறைந்தபட்ச ஊதியம் என்பது போன்ற அம்சங்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றிக் கிடைத்திடச் செய்வது அவசியம். இவை இல்லாத நிலையில், சமூகத்தில் அனைவரும் சமம் என்றோ அல்லது சமவாய்ப்புப் பெற்றவர்கள் என்றோ கருத முடியாது. சாதி-மதம் பெயரால் நீண்ட காலமாகப் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் பெரும் தடையாகி விடுகின்றன. உதாரணமாக நாட்டில், பல பகுதிகளில் பெண்களின் நிலை கவலை தருவதாகவே உள்ளது. |

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii)** கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 2 | The earliest human civilizations developed and thrived around river valleys. This was because man began to cultivate crops and it was possible around river valleys where there was abundant water and fertile soil.<br><br>Agriculture refers to the process of preparing the land for the cultivation of crops and to the rearing of cattle. It is also referred to as farming. Agriculture is a primary activity.<br><br>Agriculture crops can be broadly grouped into food and cash crops. Food crops may be grown as subsistence crops or commercial crops. (For example : Rice, Wheat, Ragi, Maize, etc.)<br><br>Cash crops are not consumed as food but are used as raw materials for forth processing (For example – Rubber, Cinchona and Cotton). |

TNPSC-SPECIMEN Prepp Your Personal Exam Guide

TNPSC SPECIMEN
www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

## அலகு — 2

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 3 | இந்து மதத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு இணையாக இஸ்லாம் மதத்தில் அதைப் போன்ற கருத்துக்களை சூபியிஸம் கொண்டிருந்தது. சூபி, வாலி, தர்வீஷ், பக்கீர் ஆகிய பெயர்கள் இஸ்லாமிய ஞானிகளைக் குறிப்பதாகும். இவர்கள் தியானம், யோகப் பயிற்சிகள், துறவறம், தியாகம் போன்றவற்றின் மூலம் உள்ளுணர்வைப் பெருக்கி இறை நிலைமையை உணர்ந்தவர்களாவர்.<br><br>சூபியிஸம் இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த, உள்முகமான, ஆச்சரியமான மற்றொரு பக்கமாகும். மதம், சமூக வேறுபாடுகள் என்ற எல்லைகளைத் தாண்டி, சூபிகள் ஒட்டுமொத்த மனித குலத்தின் மேம்பாட்டிற்காகப் பணி செய்தனர். தத்துவ ஞானிகளான இவர்கள் தங்கள் பரந்த மனப்பான்மைக்காகப் பயிற்சி பெற்றனர். இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின் உச்சம் என சூபிகள் கருதினர். அவ்வழகைக் கண்டு ஆச்சரியப்படல் வேண்டும், அதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுதல் வேண்டும், முழுக் கவனத்தையும் இறைவன் மேல் குவித்தல் வேண்டும் என்றனர்.<br><br>சூபியிஸம் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வேர் கொண்டது. சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சூபியிஸம் அனைத்து விதமான மதச் சம்பிரதாயம், பழமைவாதம், வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்தது. ஆன்மீகப் பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது. |

TNPSC SPECIMEN
Your Personal Exam Guide

TNPSC SPECIMEN
www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

## அலகு — 3

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

**(5 × 2 = 10)**

| Q.No. | |
|---|---|
| 4 | பொருள் உணர்திறன் :<br><br>நாட்டார் அரங்கக் கலைகள் தமிழ்ப் பண்பாட்டின் முக்கியமான அடையாளங்களாகத் திகழ்கின்றன. இக் கலைகளை நிகழ்த்துபவர்கள் கற்பனைத் திறன் மிகுந்த உழைக்கும் கலைஞர்கள். தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்த்தப்படும் நாட்டார் அரங்கக் கலைகளை அதன் தன்மைக்கேற்ப, 1. சடங்குசார் கலைகள் ; 2. பாடல்சார் கலைகள் ; 3. கருவிசார் கலைகள் என வகைப்படுத்துவர்.<br><br>மக்களின் வாழ்க்கைக்குள் பல்வேறு சடங்குகள் நிறைந்திருக்கின்றன. சடங்குகள் குடும்ப வெளியிலும் சமூக வெளியிலும் இடம் பெறும். சமூக வெளியில் நடப்பன கலைகளாக மாறுகின்றன. தமிழ் நாட்டில் பரவலாக உள்ள சாமியாட்டம், தேவராட்டம், கணியன் ஆட்டம், பொன்னர் சங்கர் கதைப்பாடல் முதலானவற்றில் சடங்குக் கூறுகள் அதிகம். கொடை, தீமிதி விழா, முளைப்பாரி, மயானக் கொள்ளை எனத் தமிழ்நாட்டின் கோவில் திருவிழாக்களில் சடங்கியல் நாடகங்கள் பெரும்பாலும் நடைபெறுகின்றன.<br><br>நிகழ்த்து கலைகளுள் பாடலுக்கு முக்கியத்துவம் அளித்து அரங்கேற்றப்படும் கலைகளைப் பாடல்சார் கலைகள் என்பர். பாடலுக்கேற்ற நடன அசைவுகளுடன் கூடியவை இக்கலைகள். இலாவணி, உடுக்கைப்பாட்டு, பகல்வேடம், ராஜா ராணி ஆட்டம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.<br><br>பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி நிகழ்த்தப்படும் கலைகள், கருவிசார் கலைகள் எனப்படும். நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டே ஆடுவதும், பாடுவதும் இயல்பு. கரகாட்டம், சிலம்பாட்டம், பறையாட்டம், தோல்பாவைக் கூத்து, வில்லுப்பாட்டு போன்றவற்றைக் கருவிசார் கலைகளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். |
| 1. | நாட்டார் அரங்கக் கலைகளை நிகழ்த்துவோர் யாவர்? |
| 2. | சடங்குகள் எவ்விரு வெளிகளில் இடம் பெறுகின்றன? |
| 3. | சடங்குக் கூறுகள் மிகுதியாக உள்ள கலைகள் யாவை? |
| 4. | பாடல்சார் கலைகள் – வரையறை செய்க. |
| 5. | நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் இயல்பு யாது? |

TNPSC-SPECIMEN
Your Personal Exam Guide

TNPSC SPECIMEN
www.prepp.in
Prepp Your Personal Exams Guide

## அலகு — 4

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

**ii)** 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | பொருளாதார முன்னேற்றம் – வரி விதிப்பு – நிதி ஆதாரங்கள் – வறுமை ஒழிப்பு – நலஅரசுக் கருத்தாக்கம் – நிதித்திறன் – மக்களின் நலன் – பொது சேவை – நேர் முகவரி – மறைமுக வரி. |

## அலகு — 5

*குறிப்பு :* **i)** திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | ‘‘எச்சமயத்தாரும் போற்றும் நூல், திருக்குறள்’’ – எனும் தலைப்பில் கட்டுரை வரைக. |
| | (ஆ) | வாழ்வியல் வெற்றிக்குக் ‘காலம் அறிதல்’ அவசியம் என்பதைக் குறள் வழி விளக்கியுரைக்க. |
| | (இ) | நிலைத்த உண்மைகளைப் பேசியத் திருக்குறள், பிற்காலச் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை எழுதுக. |
| | (ஈ) | காலம் – இடம் – வலி அறிதல் என வள்ளுவம் கூறுவன தற்கால அரசியலுக்கும் பொருந்தும் தன்மையை எடுத்துரைக்க. |
| | (உ) | கல்வியறிவு பெறாதவர்கள் சமூகத்தில் எவ்வாறு துன்பப்படுகிறார்கள் என்பதை கல்லாமை எங்ஙனம் நிரூபிக்கிறது ? |

TNPSC SPECIMEN
Prepp Your Personal Exam Guide

## அலகு — 6

*குறிப்பு :* **i)** கடிதம் வரைதல்

**ii)** கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** 250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | அரசுப் பள்ளியில் விளையாட்டு மைதானத்தைச் சீர் செய்துதரக் கோரி விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் நலன் அமைச்சருக்குக் கருத்துரு ஒன்று வரைக. |
| | (ஆ) | சங்கத்தமிழ் என்ற பெயர் கொண்ட நூலகம் சென்னையில் உருவாவதற்குப் பள்ளிக் கல்வித்துறையால் தமிழக அரசின் அறிக்கை ஒன்றினைத் தயார் செய்க. |
| | (இ) | ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற மாணவர்களின் நிலை குறித்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்து கல்லூரி கல்வி இயக்குநருக்கு அனுப்புக. |

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 7

*குறிப்பு :*

i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| | |
|---|---|
| Q.No. 8 | கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் எழுதுக. |
| | (1) பாடம் |
| | (2) மழை |
| | (3) இரவும் பகலும் |
| | (4) பெருஞ்செல்வம் |
| Q.No. 9 | பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க |
| | (1) தரித்தல் – தறித்தல் |
| | (2) களை – கழை |
| | (3) மலை – மழை |
| | (4) குளம் – குலம் |
| Q.No. 10 | பிரித்தெழுதுக. |
| | (1) மணவறை |
| | (2) பிறிதொருவன் |
| | (3) நீரின்றி |
| | (4) தகவிலர் |

TNPSC-SPECIMEN
Your Personal Exam Guide

Prepp
Your Personal Exams Guide

| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
|---|---|
| | (1) பண்டைக் காலத்தில் ஓவியப் போட்டி நடைபெற்றது. |
| | (2) இரு சக்கர வாகனம் இங்கு நிறுத்தலாம். |
| | (3) காந்தி நகர் இங்கு உள்ளது. |
| | (4) என்னுடன் நீங்கள் உடன் வாருங்கள். |

| Q.No. 12 | **பிழை நீக்கி எழுதுக :** |
|---|---|
| | (1) அன்னையும் பிதாவும் முன்னரி தெய்வம். |
| | (2) கறகாட்டம் தமிழரின் தொல்கலை. |
| | (3) கன் போன போக்கில் கால் போகக் கூடாது. |
| | (4) மழையை மலை என ஒலித்தல் பிளை. |

TNPSC-SPECIMEN
Your Personal Exam Guide